## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 42. ஸ்ரீஉத்தவ் சித்குணஜி

---

வடதேசத்தில் தாரூர் என்ற இடத்தில் வாழ்ந்த ஸ்ரீராமனின் மஹா உத்தம பக்தர் தான் உத்தவ்ஜி.ஸ்ரீராம தராக நாமம் அவருள் அத்வைத்த உணர்வையும் ஆன்மீக நெறியையும் வேரூன்றி வளர்ச்சி பெறச் செய்தது.தன் வாழ்வை முழுக்க முழுக்க ஆன்மீக ப்ரச்சாரம் செய்ய அவர் த்யாகம் செய்தார். ஊர் ஊராக அவர் சென்று ஆன்மீகப் பணி செய்வார்.பஜனை, ஸ்ரீராம நாம ஜெபம், சேவை என அவரது பணிகளைக் கண்டு பலர் அவரை மிகவும் மதித்தனர்.

**த்வாரகையில் ராமனைக் காண விரும்பம்**

உத்தவ்ஜிக்கு ஒரு ராம நவமியில் த்வாரகையில் கண்ணனின் வடிவில் ஸ்ரீராமனைக் காணும் ஆசை வந்தது.அதனால் தன் பயணத்தை மெதுவாக மேற்கொண்டார்.வழியில் பேதரூ என்ற சிற்றூரில் தங்கி ஆன்மீகப் பணி செய்த போது, இவரது தூய பக்தை உணர்ந்த அன்பர்கள் மிகவும் வற்புறுத்தி ஸ்ரீராம நவமியைத் தங்கள் ஊரில் நிகழ்த்துமாறு செய்தனர்.

**மதக் கலவரம்**

ஸ்ரீராம நவமி அன்று வருடம் போல் அவ்வூரில் வாழ்ந்த வேற்று மதத்தினரில் சில வெறியர்கள் உத்சவத்தைத் தடுப்பதில் சதா ஈடுபட்டதை உத்தவ்ஜி உணர்ந்து வருந்துகிறார். மத-சாதி-மொழி வேற்றுமையால் பாரத தேசம் இன்னும் பல இன்னல்களை அனுபவிக்க இருப்பதை எண்ணி வருந்தினார்.

உத்சவத்தின் முன் தினம் பந்தல் தீ வைக்கப்பட்டது, அன்ன தானம் தடை செய்யப்பட்டது.அப்போது மிகவும் உணர்ச்சிவயப்பட்ட இரு மத மக்களும் கலவரத்தில் ஈடுபட்டு சில உயிர்ச்சேதம் கூட ஏற்பட்டு விட்டது.

மக்களின் அறியாமையை எண்ணி எண்ணி மனம் நொந்த உத்தவ்ஜி தாரக மந்த்ர ஜெபம் மேற்கொண்டு முதலில் ப்ரச்சனை செய்த மதத்தினருக்கு இறைவன் அறிவு புகட்ட விண்ணப்பம் செய்தார்.

**வழிபாட்டு ஸ்தலம் முன் வந்த ஹனுமான்**

மறுநாள் வேற்று மதத்தின் வழிபாட்டு ஸ்தலம் முன் மிகப்பெரிய வனாரமாக சூக்ஷ்ம வடிவில் ஸ்ரீமாருதி தேவர் வீற்றிருந்தார்.இதை அம்மதத்தின் மூலம் ப்ரஹ்ம உண்மையை உணர்ந்த ஒரு அன்பர் உணர்ந்து கொண்டார்.தீவினையின் எதிரொலியை அவர் கேட்டார்.

மத வெறியர்கள் பலர் அவரது வாக்கைக் கேலி செய்தனர்.தங்கள் மதத்தினை விட்டு விலகும் படி மிகவும் கடுமையாக வாதிட்டனர்.மனம் நொந்த அவர் "சத்யம் எதுவோ அதுவே நிகழும்!" என்று கூறி ஊரைவிட்டும் சென்றுவிட, பலர் காண அவ்வழிப்பாட்டு ஸ்தலம் இடிந்து விழுகிறது.அப்போதே மக்கள் உண்மையை உணர்ந்தனர்.அரசனும் அவர்களின் வெறியைக் கண்டித்தான்.

**யாருக்குப் பரிட்சை?**

மதம் வேறு ஆன்மீகம் வேறு என்பதை அவன் உத்தவ்ஜி மூலம் உணர்ந்தான்.அரசன் தன் ராஜ்யத்தில் மத த்வேஷம் இன்றி ஆட்சி செய்ய முடிவு செய்தான்.திருந்த வேண்டிய மக்கள் திருந்தினர், மறுத்த மக்கள் அப்படியே வாழ்ந்தனர்.உத்தவ்ஜி மன்னனை ஆசீர்வதித்து த்வாரைகை நோக்கிப் பயணம் செய்தார்.எம்மதமும் கூறும் தெய்வமும் ஆன்மீகமும் ப்ரஹ்ம சத்யமும் ஒன்றே என்று அவர் உணர ஸ்ரீராமன் அவருக்கு வைத்த பரிட்சை என்று அவருக்குத் தெரியாதா என்ன?

**<u>அன்பர்களின் சத்யமான ப்ரார்த்தனைக்கு ஸ்ரீமாருதி என்றென்றும் செவி சாய்ப்பார் என்பது உண்மை.</u>**

ஹரி ஓம்!